இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 116 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 20 – சனிக்கிழமை 06 டிசம்பர் 2025 – கோவை ★★ 16 + 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 116: Thiruvalluvar Year - 2056 - Karthigai 20 - Saturday 06 December 2025 - Kovai ★★ 16 + 16 Pages ₹ 5.00

## திருப்பரங்குன்றம் தீபம் விவகாரம்: தனி நீதிபதியின் உத்தரவினால்

# மத நல்லிணக்கம் - சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2025) தமிழ்த் திரையுலகின் முதுபெரும் ஆளுமை ஏவி.எம். சரவணன் அவர்கள் மறைவெய்தியதையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன் ஆகியோர் உள்ளனர்.

## மதுரை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

மதுரை, டிச.6-

**திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பாக தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவால், சமூக நல்லிணக்கமும், சட்டம் ஒழுங்கும் பாதிக்கப்படும் என்று உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தமிழ்நாடு அரசு தரப்பில் வாதிடப்பட்டது.**

மதுரை திருப்பரங்குன்றம் மலை மீது சிக்கந்தர் தர்கா அருகே கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிடும்படி, மதுரை எழுமலையைச் சேர்ந்த ராம ரவிக்குமார் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், சிக்கந்தர் தர்கா அருகே கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிட்டார். மேலும், சி.ஐ.எஸ்.எஃப் வீரர்கள் பாதுகாப்புடன் தீபம் ஏற்ற மனுதாரருக்கு அறிவுறுத்தினார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. இவ்வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசுத்தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரவீந்திரன், திருப்பரங்குன்றத் தில் தீபம் ஏற்றுவது தொடர்பாக தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு தவறானது என்றும் இந்த உத்தரவால் சமூக நல்லிணக்கம் மற்றும் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்றும் வாதிட்டார்.

மனுதாரர் வேண்டுமென்றே சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி மத ரீதியிலான பதற்றத்தை உருவாக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும், தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு நீதித்துறையை மீறிய செயல் என்றும் தமிழ்நாடு அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது.

### தனி நீதிபதிக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது?

திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான வழக்கில் தனி நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அதிகார வரம்பை மீறியுள்ளதாக சுட்டிக்காட்டிய அரசு வழக்கறிஞர், CISF படையினரை திருப்பரங்குன்றத்திற்கு அனுப்ப தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது என்று கேள்வி எழுப்பினார்.

உயர்நீதிமன்றத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுதான் CISF படையினரின் பணி என்றும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது மாநில காவல்துறையின் கடமை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சமூக நல்லிணக்கம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.

### 13 பேர் கைது

இந்நிலையில் மதுரை திருப்பரங்குன்றத்தில் 100 ஆண்டுகள் மரபு படி தீபம் ஏற்றப்படும் இடத்தில் கோயில் நிர்வாகத்தினர் டிச.3 அன்று கார்த்திகை தீபம் ஏற்றினர். உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட நிலையில், இந்து முன்னணியினர் வன்முறையில் ஈடுபட்டனர்.

அப்போது, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 2 போலீஸார் காயமடைந்தனர். இந்நிலையில், வன்முறையில் ஈடுபட்ட இந்து முன்னணி நிர்வாகிகள் உள்ளிட்ட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல் உள்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருப்பரங்குன்றத்தில் அமைதியான சூழல் நிலவ 144 தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## தலைப்புச் செய்திகளில் வருவது போல்

# இந்தியாவின் வளர்ச்சி வலுவாக இல்லை!

### பொருளாதார வல்லுநர் அரவிந்த் சுப்பிரமணியன் விமர்சனம்!

சென்னை, டிச.6-

**இந்தியாவின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகரும், பீட்டர்சன் இன்ஸ்டிடியூட் ஃபார் இன்டர்நேஷனல் எகனாமிக்ஸின் மூத்த உறுப்பினருமான அரவிந்த் சுப்பிரமணியன், தலைப்புச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்தியாவின் வளர்ச்சி அவ்வளவு வலுவாக இல்லை என்று கூறினார்.**

**ஏனென்றால், மற்ற எல்லா குறிகாட்டிகளையும் நீங்கள் பார்த்தால், தனியார் முதலீடு இவ்வளவு காலமாக சீரற்றதாகவே உள்ளது. அந்நிய நேரடி முதலீடு (FDI) குறைந்து வருகிறது. நுகர்வு வளர்ச்சி பலவீனமாக உள்ளது. எனவே, பொருளாதாரம், ஒருவேளை, தலைப்பு எண்கள் குறிப்பிடுவது போல் வலுவாக இல்லை என்று பல குறிகாட்டிகள் தெரிவிக்கின்றன," என்று அவர் தனது புத்தகமான A Sixth of Humanity: Independent India's Development Odyssey வெளியீட்டு நிகழ்வில் கூறினார். ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் ஸ்டார் அறக்கட்டளை தெற்காசிய ஆய்வுகள் பேராசிரியர் தேவேஷ் கபூருடன் இணைந்து அவர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.**

இந்தப் புத்தக வெளியீட்டு நிகழ்விற்கு மெட்ராஸ் மேலாண்மை சங்கம் மற்றும் மெட்ராஸ் மேம்பாட்டு ஆய்வுகள் நிறுவனம் (MIDS) ஏற்பாடு செய்திருந்தன.



முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநரும் எம்ஐடிஎஸ் தலைவருமான துவ்வூரி சுப்பாராவின் கேள்விக்கு பதிலளித்த அரவிந்த் சுப்பிரமணியன், சேவைத் துறை வளர்ச்சியின் இயந்திரமாக இருக்கப் போகிறது என்ற ஒரு சிந்தனைப் பள்ளி இருப்பதாகக் கூறினார்.

தொடர்ந்து "சேவைகள் சார்ந்த ஒரு மாதிரி வெற்றி பெற்றாலும், அது 1% முதல் 2% தொழிலாளர் படைக்கு வளர்ச்சியையும் வாய்ப்புகளையும் வழங்கும். செயற்கை நுண்ணறிவு பற்றி நாம் பேசும் போது, அது உண்மையில் இந்தியாவுக்கு இரட்டை அடியாகும், ஏனெனில் அது குறியீட்டு முறை போன்ற பணிகளை மாற்றுகிறது அல்லது மாற்ற அச்சுறுத்துகிறது, இதில் இப்போது நமக்கு ஒரு போட்டியாக இருக்கும் நன்மை உள்ளது," என்று அவர் கூறினார்.

"இந்தியா உற்பத்தியை மீண்டும் தொடங்க வேண்டும். டிரம்ப் வரிவிதிப்பு வரும் வரை சீனா பிளஸ் ஒன் உத்தி (சீனாவிற்கு வெளியே விநியோகச் சங்கிலிகளை வைத்திருக்க விரும்பும் மக்கள்) இந்த வாய்ப்பை வழங்கி வந்தது. வரி பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும். குறைந்த திறன் கொண்ட உலகளாவிய ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 45-50% ஆகும், அதே நேரத்தில் இந்தியாவின் பங்கு 34% ஆகும். இந்தியாவின் பங்கை 10-12% ஆக உயர்த்த முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. இது உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஊக்கத்தை அளிக்கும்," என்றும் சுப்பிரமணியன் மேலும் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் சௌமியா சுவாமிநாதன், "ஆயுட்காலம் கணிசமாக மேம்பட்டிருந்தாலும், ஆரோக்கியமான ஆயுட்காலம் மேம்படவில்லை. இதன் பொருள் தனிநபர், குடும்பம் மற்றும் சுகாதார அமைப்பின் மீது இறுதியில் நோயின் சுமை காரணமாக ஒரு பெரிய சுமை உள்ளது. இதன் பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும், அதாவது அடிப்படையில் சுத்தமான காற்று, சுத்தமான நீர், சுகாதாரம், சத்தான உணவு மற்றும் நல்ல வீட்டுவசதி ஆகியவற்றை வழங்குவதாகும்" என்றார்.

## டெல்லி காற்று மாசு விவகாரம்: 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

*புதுடெல்லி, டிச.6-*

*புதுடெல்லி காற்று மாசு குறித்து விவாதம் நடத்த அனுமதி அளிக்க வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*புதுடெல்லியில் வரலாறு காணாத வகையில் காற்றுமாசு நிலவி வருகிறது. இதனால், மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல்நலக் குறைவால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், காற்று மாசு குறித்து நாடாளுமன்றத்தில் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, காற்று மாசை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத டெல்லி மாநில பா.ஜ.க., அரசு மற்றும் ஒன்றிய பா.ஜ.க., அரசை கண்டித்தும், இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி அளிக்க வலியுறுத்தியும் இந்தியா கூட்டணி எம்.பி.,க்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

## தமிழ்த் திரையுலகின்

# முதுபெரும் ஆளுமைகளில் ஒருவர் ஏவி.எம். சரவணன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.6-

**"தமிழ்த் திரையுலகின் முதுபெரும் ஆளுமைகளில் ஒருவர் ஏவி.எம். சரவணன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-



தமிழ்த் திரையுலகின் முதுபெரும் ஆளுமைகளில் ஒருவரும் வரலாற்றுப் புகழ்மிக்க AVM நிறுவனத்தின் முகமாகவும் திகழ்ந்த ஏவி.எம். சரவணன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். தமிழ்த்திரையுலகின் பாதையைத் தீர்மானித்து உருவாக்கியதில் ஏவி.எம். நிறுவனத்தின் பங்கு எவ்வளவு முக்கியமானதோ - அதே அளவுக்கு ஏவி.எம். நிறுவனத்தின் பாதையைத் தீர்மானித்த தில் சரவணன் அவர்களுடைய பங்கும் அளப்பரியது.

புதல்வராகவும் - திரைத்துறை ஆளுமையாகவும் "அப்பச்சி" என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவரது தந்தை மதிப்பிற்குரிய ஏவி.எம். அவர்களுக்குப் புகழ் சேர்த்தவர் சரவணன் அவர்கள். பேரறிஞர் அண்ணாவின் "ஓர் இரவு", தலைவர் கலைஞரின் "பராசக்தி", முரசொலி மாறன் அவர்களது "குலதெய்வம்" என ஏவி.எம். நிறுவனத்துக்கும் திராவிட இயக்கத்தின் திரைப்பயணத்துக்கும் நெடிய தொடர்புண்டு. அந்த பந்தம் குடும்பப் பாசமாகி, எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகியவர் ஏவி.எம்.சரவணன் அவர்கள்.

கடந்த 2023-ஆம் ஆண்டு மே மாதம் ஏவி.எம்-மின் ஹெரிடேஜ் அருங்காட்சியகத்தை நான் பார்வையிடச் சென்றபோது, அந்த நினைவலைகளைப் பகிர்ந்து பாசமுடன் பழகினார். அமைதியும் எளிமையுமே பண்புநலமாகக் கொண்டு எல்லோரிடமும் அன்பொழுகப் பழகிய அவரது மறைவால் வாடும் ஏவி.எம் குடும்பத்தாருக்கும், திரையுலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.